[முற்பகல் 10.00]

(3) உரிமைப் பிரச்னைகள்.

அ. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 184-வது விதியின்கீழ் திரு. ஆர். உமாநாத் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மீது ஓர் அவை உரிமை மீறல் பிரச்சனையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவையில் எழுப்புவதற்கு அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் ஏற்கெனவே ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொடுத்திருக்கிறேன். அதை 26-ந் தேதி எடுத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தீர்கள். ஆகவே, அருள்கூர்ந்து அதையும் இன்றைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு வரவில்லை என்றால் பின்னால், இது முடிந்த பிறகு கேளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தாங்களே ஒரு வாரத்திற்கு முன்னால் 26-ந் தேதி எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும் இருக்கிறார், நானும் இருக்கிறேன். ஆகவே, அருள்கூர்ந்து அதை இன்றைக்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8 ஆம் நாளன்று ஒரு கால் அட்டன்ஷன் நோட்டீஸுக்கு டி.வி.எஸ். டிஸ்பியூட் சம்பந்தமாக முதலமைச்சர் முன்னால் ஏற்பட்டிருக்கக்கூடிய 'அக்கார்டு' அமல்படுத்தப்படவில்லை என்பது சம்பந்தமாக தொழிலாளர் நல அமைச்சரின் பதிலிலிருந்து எழக்கூடிய பிரிவிலேஜ் மோஷன் இது. அது சம்பந்தமாக பதில் கூறும் போது. இருசாராரும் ஒத்துழைக்காததன் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தத்தை மேற்கொண்டு நிறைவேற்றவில்லை என்று சொன்னார். அவர் அப்போது பேசும்போது, ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களுடன் பேசி ஒரு அண்டர்ஸ்ஸ்டாண்டிங் ஏற்பட்டிருக்கிறது. அதை அந்தத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் கையாளவில்லை. முதலாளிகளும் கையாளவில்லை. அவரவர்கள் அவரவர்கள் பாதையில் சென்று விட்டார்கள். உற்பத்தி கொடுக்க வேண்டுமென்று சொன்னதை தொழிலாளர்கள் செய்யவில்லை என்று சொன்னார்கள்.

இந்த போர்ஷன் மூலமாக தந்த இந்த அறிக்கையில் உண்மைக்குப் புறம்பானவற்றைத் தந்திருக்கிறார்கள். இது ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்த கருத்திற்கு முற்றிலும் மாறானது. இந்த அவையை திசைத் திருப்புவதற்கு கொடுக்கப்பட்ட

*1979 மார்ச் 26]* *[திரு. ரா. உமாநாத்]*

**பதில்** இது. டி.வி.எஸ், தொழிலாளர்களை பழிப்பதற்காகவே இந்த முறையில் மாற்றிக் கூறியிருக்கிறார். முதலமைச்சர் முன்னால் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தம். அதை இருசாராரும் மீறினார்கள் என்று சொல்வது உண்மையல்ல. ஏனென்றால் அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தொழிலாளர்கள் வேலைக்குப் போகும்போது வன்முறை என்று சாக்குப் போக்குச் சொல்லி, உடன்பாட்டை மீறிவிட்டு 'லாக் அவுட்' செய்தார் முதலாளி. அந்த உண்மையை 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 20 ஆம் நாளன்று ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஊர்ஜிதம் செய்துள்ளார் அமைச்சர். முதலமைச்சர் அவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொடுக்கிறோம் என்று சொன்னது உண்மைதான். முதல் அமைச்சர் அவர்களிடம் யாரும் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கவில்லை. முதலமைச்சருக்கு என்று எழுதி, என்னிடத்தில்தான் கொடுத்தார்கள். அப்படி 716 பேர்கள் கொடுத்தார்கள். அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி, சுந்தரம்-கிளேட்டன் டி.வி. எஸ்.—லூகாஸ் சார்பில் திரு. பாலாஜி என்பவரும் திரு. ரத்னம் என்பவரும் கையெழுத்துப் போட்டது உண்மை. ஆனால் அதற்குப் பின்னால் சிலர் வயலென்ஸ் என்ற முறையில் இடுபட்டார்கள் என்ற காரணத்தைக் கூறி அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது தாங்கள் கையெழுத்துப் போட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதைத் திரும்ப வாங்குகிறோம் என்று சொன்னார்கள். இதை இல்லீகல் என்று சொல்ல முடியாது. இது ஒரு ஏற்பாடே தவிர, தொழிற் தகராறு சட்டம் 18 (1), 12 (3)-ன்படி செய்த ஒப்பந்தம் அல்ல.

It is immoral but it is not illegal.

என்று பதில் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே இருவரும் மீறியதாக பதில் சொல்லவில்லை. முதலாளி மீறியதாகக் கூறியிருக்கிறார்.

ஆனால் இப்போது முதலாளி மீறவில்லை; தொழிலாளர்களும் மீறினார்கள் என்றால் அதற்கு இடமில்லை. இன்னொன்றையும் சொன்னார்கள். ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களுக்கும், சி.ஐ.டி.யு. தொழிலாளர்களுக்கும் கிளாஷ் ஏற்பட்டு, ஐ.என்.டி.யு.சி. ஊழியரை கொலை செய்ததாக முதலாளி கூறியது கூட உண்மை அல்ல; எங்களுடைய ஏ.ஐ.ஏ.டி.எம்.கே. மெம்பர்தான் கொலை செய்யப்பட்டார் என்று கூறியிருக்கிறார்கள். அத்தனைக்கும் பிறகு தொழிலாளியும் மீறினார், முதலாளியும் மீறினார் என்று பின்னால் கூறியதற்கு காரணம் என்ன? செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுவதன் மூலம் டி.வி.எஸ். முதலாளி சட்டப்படி இல்லாவிட்டாலும் தார்மீகமாக ஒரு குற்றத்தைச் செய்துள்ளார். அதிலிருந்து டி.வி.எஸ். முதலாளியைக் கரையேற்றவேண்டுமென்றே இருவரும் மீறியதாக உண்மைக்கு புறம்பாக பேசுகிறார். டி.வி.எஸ். முதலாளிக்கு முன்னால் இந்த அமைச்சர் தனது 'இம்பொட்டன்சியை' காட்டியிருக்கிறார் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1979 மார்ச் 26

டி.வி.எஸ். முதலாளிகளை, ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்காக நிர்ப்பந்திக்கத் திராணியற்ற தனது நிலைமையை மறைப்பதற்காகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டமன்றத்தில் இந்த மாதிரி கூறி இருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, நமது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களுக்கு சமீப காலமாக டி.வி.எஸ். தொழிலாளர்கள் என்ற பிரச்சினை வந்தாலே ஒரு அலர்ஜி

He takes sadistic pleasure in worker baiting

என்பதற்காக தொழிலாளர்களும் இதனை நிராகரிக்கிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லி சிற்றின்பம் அனுபவிக்கிறார். அவர் இன்பத்தை அனுபவிக்கட்டும். அதிலே ஏற்படுகின்ற துர்நாற்றத்தையும் அனுபவிக்கட்டும் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இந்த அவைக்கு அவர் தவறான தகவலைத் தருகிறார் என்ற காரணத்தினால் இதனை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் ஏதாவது சொல்லவேண்டும் என்றால் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நாளையதினம் விவரமாக இதற்கான பதில் அறிக்கையைத் தருகிறேன். நான் சொன்னது சரிதான் என்பதையும் முதலமைச்சர் முன்னால் எற்பட்ட It is only an understanding and not settlement under 12 (3) என்பதையும் விளக்குவதற்குரிய அறிக்கையினை நாளை தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் நாளை நமது அறிக்கையினை அளிப்பார்கள். பின்னர் எனது தீர்ப்பு அளிக்கப் பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. எம். அரங்கநாதன், மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் அறிவிப்புத் கொடுத்துள்ளனர். இதே பொருள் குறித்துக் திரு. பொன்னுரங்கம் அவர்களும் ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார். இப்பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன். திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் முன்மொழிவார்.

## ஆ. உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையை முன்மொழிகிறேன்.